kotak கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 27 BKC, C 27, G பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கிழக்கு), மும்பை - 400051. CIN : L65110MH1985PLC038137
கிளை அலுவலகம் : கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்., சாம்சன் டவர்ஸ் (4 வது தளம்) 402, 403, பேந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600008.
CIN : L65110MH1985PLC038137, www.kotak.com

அசையா சொத்துக்களுக்கான மின்னணு ஏலம் மற்றும் விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம் 2002") - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 8(6) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்கள் மற்றும் / அல்லது அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் ("ஜாமின் பெற்ற கடனளித்தவர்") க்கு கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமின் பெற்ற கடனளித்தவரின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 20 ஏப்ரல் 2018 அன்று இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள், ஜாமின் பெற்ற கடனளித்தவராக உள்ள கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் - க்கு கடன்தாரர் / அடமானதாரர் M/s V.N. அய்யாதுரை, எண். 1, சோழன் தெரு, வீரப்பன்சத்திரம், ஈரோடு - 638 004 தமிழ்நாடு என்ற நபரிடமிருந்து 14 செப்டம்பர் 2016 தேதிய கோரிக்கை அறிவிப்பு படி நிலுவையாக உள்ள தொகை ரூ. 15,42,87,521.75/- (ரூபாய். பதினைந்து கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து ஐநூற்று இருபத்து ஒன்று மற்றும் பைசா எழுபத்து ஐந்து மட்டும்) மற்றும் பணம் செலுத்தப்படும் வரை / வசூலிக்கப்படும் வரை மேற்கொண்டு வரும் ஒப்பந்த விகிதத்திலான வட்டி, கூட்டு வட்டி மற்றும் இதர கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்", "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 25.08.2022 அன்று விற்பனை செய்யப்படுகின்றன. குறிப்பு : 2022 ஜூலை 11 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ. 111,45,01,914.63/- (ரூபாய். நூற்று பதினோரு கோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து பதினான்கு மற்றும் பைசா அறுபத்து மூன்று மட்டும்)

ஏலத்திற்கு விடப்பட்டுள்ள சொத்துக்களின் விபரங்கள் / விபரணம், அடிப்படை விலை, டேவணித்தொகை மற்றும் ஏல பட்டியல் ஆகியன இதன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமின்தாரர் / அடமானதாரர் பெயர்	மின்னணு ஏலத்திற்கு விடப்பட்ட அசையா சொத்துக்கள் விபரம்	ஆன்லைன் விலைகோரல் சமர்ப்பிக்க கடைசி தேதி	மின்னணு ஏல தேதி & நேரம்	அடிப்படை விலை இந்திய ரூபாயில்	டேவணித் தொகை இந்திய ரூபாயில்
M/s. அய்யாதுரை, V. N. அய்யாதுரை விக்ரம் சுதாகர் Ms. ஐஸ்வர்ய லட்சுமி	**திரு. V.N. அய்யாதுரைக்கு சொந்தமான சொத்து** : ஈரோடு பதிவு மாவட்டம், சார்பதிவு மாவட்டம், பிராமண பெரிய அக்ரஹாரம் கிராமம், R.S. எண். 41/2A = 0.84.50 ஹெக்டேர், R.S. எண். 41/2B = 0.01.50 ஹெக்டேர், R.S. எண். 41/1C = 0.28.00., இதில் உள்ள 50 சென்ட் பரப்பளவு கொண்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **இதன் எல்லைகளாவன** : வடக்கு - மேற்கண்ட பாகப்பிரிவினையில் உள்ள பட்டியல் A சொத்தின் கீழ் வருகின்ற ராமச்சந்திரன் சொத்து, தெற்கு - ஈரோடு பவானி பிரதான சாலைக்கு செல்லும் கிழமேல் காவேரி சாலை, கிழக்கு - சர்வே எண். 41/1C, 42/2 மற்றும் சுப்ரமணியம் கோவிலுக்கு சொந்தமான சொத்து, மேற்கு - விக்ரம் சுதாகருக்கு ஒதுக்கப்பட்ட பட்டியல் D சொத்து.. மற்றும் அதனுடன் கூடிய அதில் உள்ள கட்டிடம் மற்றும் அதனுடன் கூடிய அருகிலுள்ள இடங்களுக்கு சென்று வர உள்ள மாமூல் பாதை உரிமை மற்றும் கிணறு சகிதம். இச்சொத்து அதனுடன் கூடிய அனைத்து தற்கால மற்றும் வருங்கால கட்டமைப்புகளுடன் பிராமண பெரிய அக்ரஹாரம் டவுன் பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.	24 ஆகஸ்ட் 2022 மாலை 06.00 மணி வரை	25 ஆகஸ்ட் 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை	ரூ. 1,96,02,000/-	ரூ.19,60,200/-
	திரு. விக்ரம் சுதாகருக்கு சொந்தமான சொத்து : ஈரோடு பதிவு மாவட்டம், சார்பதிவு மாவட்டம், பிராமண பெரிய அக்ரஹாரம் கிராமம், R.S. எண். 41/2A = 0.84.50 ஹெக்டேர், R.S. எண். 41/2B = 0.01.50 ஹெக்டேர், R.S. எண். 41/1C = 0.28.00., இதில் உள்ள 1.33-1/2 ஏக்கர் பரப்பளவு கொண்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **இதன் எல்லைகளாவன** : வடக்கு - பத்மாவதி மற்றும் ராமச்சந்திரன் சொத்து, தெற்கு - ஈரோடு பவானி பிரதான சாலைக்கு செல்லும் கிழமேல் காவேரி சாலை, கிழக்கு - V.N. அய்யாதுரைக்கு ஒதுக்கப்பட்ட பட்டியல் "E" சொத்து, மேற்கு - காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் அதனுடன் கூடிய அதில் உள்ள கட்டிடம். மற்றும் அதனுடன் கூடிய அருகிலுள்ள இடங்களுக்கு சென்று வர உள்ள மாமூல் பாதை உரிமை மற்றும் கிணறு சகிதம். இச்சொத்து அதனுடன் கூடிய அனைத்து தற்கால மற்றும் வருங்கால கட்டமைப்புகளுடன் பிராமண பெரிய அக்ரஹாரம் டவுன் பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.	24 ஆகஸ்ட் 2022 மாலை 06.00 மணி வரை	25 ஆகஸ்ட் 2022 பிற்பகல் 03.00 மணி முதல் 04.00 மணி வரை	ரூ. 5,40,80,000/-	ரூ.54,08,000/-

கீழ்க்கையொப்பமிட்ட நபர் தனது அதிகாரத்தின் கீழும், வாங்க உத்தேசித்துள்ள நபர்களின் வேண்டுகோளின் பேரிலும் 19.08.2022 ம் தேதியன்று நண்பகல் 01.00 மணி முதல் 03.00 மணி வரை, அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி / முகவர் மூலம் மேற்சொன்ன சொத்துக்களை ஆய்வு செய்ய ஏற்பாடு செய்யலாம்.

முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன : 1). ஏல விற்பனை "ஆன்லைன் மின்னணு ஏலம் / விலைகோரல்" முறையில் வலைதளம் https://kotakbank.auctiontiger.net மூலம் 25 ஆகஸ்ட் 2022 ம் தேதி பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (ஒவ்வொரு சொத்துக்கும் ஒதுக்கப்பட்ட நேர ஒதுக்கீட்டுடன் ஒவ்வொரு முறையும் வரம்பில்லா 5 நிமிட நீட்டிப்புடன்) நடத்தப்படும். 2). ஏல விற்பனையானது "ஆன்லைன் மின்னணு ஏலம் / விலைகோரல்" மூலம் கோட்டக் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரர் M/s. www.c1india.com மூலம் நடத்தப்படும். மின்னணு ஏலம் தொடர்பான விபரங்களுக்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் M/s. E-Procurement Technologies Limited (Auction Tiger), திரு. வினோத் சவுஹான் அலைபேசி எண். - 93138 87931 மின்னஞ்சல் முகவரி - delhi@c1india.com அல்லது மின்னஞ்சல் முகவரி - support@bankeauctions.com தொடர்பு எண். 7291981124 / 25 / 26 https://www.bankeauctions.com யை தொடர்பு கொள்ளலாம். 3). விருப்பமுள்ள ஏலதாரர்கள் ஏலத்துக்கான விபரங்களுக்கும் விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் வங்கியின் வலைதளம் https://www.kotak.com/en/bank-auctions.html ல் பார்வையிடலாம். 4). ஏல விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஏலதாரர்கள் https://www.bankeauctions.com யை பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.. மேலும் மேற்சொன்ன விதிகள் மற்றும் நிபந்தனைகள் விலைகோரல் செயல்முறையில் பங்கேற்கும் ஏலதாரர்களை கட்டுப்படுத்தும். 5). விருப்பமுள்ள ஏலதாரர்/கள் தங்களது விலைப்புள்ளிகளையும் இதர ஆவணங்களையும் பதிவேற்றம் செய்வதற்கு முன்பு வலைதளம் https://kotakbank.auctiontiger.net யிலிருந்து இருக்கும் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்கிக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 6). விலைப்புள்ளி படிவம் உரிய வடிவில் நிரப்பப்பட்டு ஏலதாரர்களின் KYC ஆவணங்களுடன் சேர்த்து வலைதளம் https://kotakbank.auctiontiger.net ல் 24.08.2022 அன்று மாலை 06.00 மணி அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும் / பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்., மேலும் முறையாக நிரப்பப்பட்டு கையொப்பமிடப்பட்ட விலைப்புள்ளி ஆவணங்கள் மற்றும் ஏலதாரர்களின் KYC ஆவணங்களின் ஒளி வருடப்பட்ட நகல்களை மின்னஞ்சல் மூலமாக மின்னஞ்சல் முகவரி ponraj.thangadurai@kotak.com மற்றும் gk.raghuram@kotak.com க்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது ஏலதாரர் மின்னஞ்சலின் உள்ள பொருள் வரியில் "For purchase of Property in the matter of "M/s AYYADURAI Erode / Tamilnadu" என குறிப்பிட வேண்டும். 7). உத்தேச ஏலதாரர்கள் உள்நுழைவு அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலும், ஆன்லைன் விலைகோரல் செயல்முறை போன்றவற்றிலும் M/s. www.c1india.com,support@bankeauctions.com யிடமிருந்து இதன் மேற்குறிப்பிட்ட எண்களில் தொடர்பு கொண்டு ஆன்லைன் பயிற்சி பெற்றுக்கொள்ளலாம். 8). டேவணித்தொகை RTGS / NEFT / FUND TRANSFER மூலம் கணக்கு எண். 06410125272001, Kotak Mahindra Bank Ltd., நரிமன் பாயிண்ட் கிளை, மும்பை, IFSC Code: KKBK0000958 க்கு 24.08.2022 அன்று மாலை 06.00 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும். டேவணித்தொகை இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விலைப்புள்ளி தன்னியல்பாகவே நிராகரிக்கப்படும். உத்தேச ஏலதாரரால் செலுத்தப்பட்ட டேவணித்தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது. 9). சமர்ப்பிக்கப்படும் விலைப்புள்ளியானது அடிப்படை விலைக்கு சமமானதாக மற்றும் / அல்லது அதற்கு மிகையானதாக இருக்க வேண்டும்., மேலும் விலைகோரல் செயல்முறையில் விலைப்புள்ளி சமர்ப்பித்த ஏலதாரர்கள் தங்களது விலைப்புள்ளிகளை இந்திய ரூபாய். 1,00,000.00 (ரூபாய். ஒரு இலட்சம் மட்டும்) என்ற மடங்கில் அதிகரித்துக்கொள்ளலாம். 10). மின்னணு ஏல செயல்முறை முடிவுறுவதற்கு கடைசி 5 நிமிடத்தில் ஏதேனும் விலைப்புள்ளி வைக்கப்பட்டால், முடிவுறு நேரம் தன்னியல்பாகவும், உடனடியாகவும் மற்றுமொரு 5 நிமிடத்துக்கு நீட்டிக்கப்படும். 11). வெற்றி பெற்ற ஏலதாரர் அதிகபட்ச விலைப்புள்ளியில் 25% தொகையை (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) மின்னணு ஏல விற்பனை செயல்முறை முடிவுற்ற பிறகு உடனடியாக அல்லது மின்னணு ஏல வேலை நாள் முடிவுறுவதற்குள் அல்லது அடுத்த வேலை நாளில் இதன் மேற்குறிப்பிட்ட முறையில் செலுத்த வேண்டும். அதிகபட்ச விலைப்புள்ளியில் மீதி 75% தொகையை, விற்பனை ஏற்றுக்கொள்ளப்பட்ட / உறுதிப்படுத்தப்பட்ட விபரத்தை வெற்றி பெற்ற ஏலதாரருக்கு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அல்லது சர்ஃபாசி சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் கீழான அதிகாரப்பூர்வ அலுவலரின் அதிகார வரம்பில் அதிகரிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செலுத்தப்பட வேண்டும். 12). மொத்த ஏல விற்பனை தொகை மற்றும் இதர செலவுகள் ஆகியவற்றை பெற்றதன் பேரில் அதிகபட்ச விலைகோரிய நபருக்கு அவரது பெயரில் விற்பனை சான்று வழங்கப்படும் வரை, அதிகபட்ச விலை கோரிய நபருக்கு சொத்து மீது எந்த உரிமையையோ சொத்துரிமையையோ பெறுவதில்லை. விற்பனையானது மின்னணு ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இது தொடர்பாக ஜாமின் பெற்ற கடனளித்தவரின் உறுதிப்படுத்தலுக்கும் கட்டுப்பட்டது. 13). வெற்றி பெற்ற ஏலதாரர் மொத்த விலைத்தொகையையும் / ஏல தொகையையும் செலுத்த தவறும் பட்சத்தில், வெற்றி பெற்ற ஏலதாரரால் செலுத்தப்பட்ட மொத்த தொகையும் அபராதமாக கருதி கழித்துக்கொள்ளப்படுவதோடு, தவறிழைத்த ஏலதாரர் சொத்து மீதோ அல்லது செலுத்தப்பட்ட தொகை மீதோ எந்த கோரிக்கையும் அற்றவராவார். ஏல சொத்துக்கள் மீது சர்ஃபாசி சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் கீழ் அதிகாரப்பூர்வ அலுவலர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையை செயலுறுத்த உரிமையுடையவராவார். 14). இதன் மேற்குறிப்பிட்ட வாறு உரிய காலக்கெடுவுக்குள் மொத்த விற்பனை தொகையையும் பெற்றதன் பேரில், அதிகாரப்பூர்வ அலுவலர் விற்பனை சான்றை வழங்குவார்.. அதன் பிறகே விற்பனை முடிவுறும்.. அதன் பிறகு கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் எந்த கோரிக்கையையும் அனுமதிக்காது. 15). விற்பனை சான்று விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்ட பெயரிலேயே வழங்கப்படும். விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள பெயரை தவிர, இதர நபர்(களின்) பெயர்களை விற்பனை சான்றில் சேர்க்க / மாற்ற கோரும் விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. 16). வெற்றி பெறாத ஏலதாரர்/களின் டேவணித்தொகை கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் - ஆல் அவர்களது கணக்குகளில் RTGS / NEFT / Funds Transfer மூலம் எந்த வட்டியுமின்றி 15 நாட்களுக்குள் திருப்பி தரப்படும். 17). அதிகாரப்பூர்வ அலுவலர், விலைப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க மற்றும் எக்காரணமும் கூறாமல் அறிவிக்கப்பட்ட மின்னணு ஏல விற்பனையை ஒத்தி வைக்க / ரத்து செய்ய உண்டான அதிகாரத்தை தன்வசத்தே கொண்டுள்ளவராவார். அவ்வாறு விலைப்புள்ளிகளை சமர்ப்பித்த பிறகு மின்னணு ஏலத்தை ஒத்தி வைத்தாலோ / ரத்து செய்தாலோ நடந்தால், ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட டேவணித்தொகை வட்டியின்றி திருப்பி தரப்படும்., விலைப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டால், அதிகாரப்பூர்வ அலுவலர் இதர ஏலதாரர்கள் அல்லது இதர நபர்களுக்கு மத்தியில் தனியார் ஒப்பந்தம் மூலம் சொத்தை விற்பனை செய்ய பேச்சு வார்த்தை மேற்கொள்ளலாம். 18). ஏதேனும் ஏலதாரரோ ஒன்றுக்கு அதிகமான சொத்துக்கு விலைகோர உத்தேசித்தால், ஏலதாரர்கள் இதன் மேற்குறிப்பிட்ட செயல்முறையை பின்பற்றி, ஒவ்வொரு சொத்துக்களுக்கும் தனித்தனி விலைப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டும். 19). இதன் மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள ஜாமின் சொத்துக்களின் விபரங்கள் யாவும் அதிகாரப்பூர்வ அலுவலர் / ஜாமின் பெற்ற கடனளித்தவரின் சிறந்த தகவலுக்கு எட்டிய வகையில் கூறப்பட்டவையாகும். ஆனால் அதிகாரப்பூர்வ அலுவலரோ / ஜாமின் பெற்ற கடனளித்தவரோ இப்பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான கூற்று அல்லது தவிர்த்தல் இருப்பின் அதற்கு பதிலளிக்க கடமைப்பட்டவரல்ல. 20). வங்கிக்கு தெரிந்த வகையில், சொத்து மீது எந்த வில்லங்கமும் இல்லை. எனினும், விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, ஏலத்திற்கு விடப்பட்டுள்ள சொத்து மீதான வில்லங்கம், சொத்துரிமை மற்றும் சொத்தை பாதிக்கும் கோரிக்கைகள் / சொத்து வரி, மின் கட்டண நிலுவைகள் போன்றவற்றை பொறுத்து, தங்களது சுய விசாரணையை மேற்கொண்டிருக்க வேண்டும். 21). அனைத்து சட்டரீதியான நிலுவைகள், பதிவு கட்டணம், முத்திரை தீர்வை, வரிகள் உள்ளிட்ட இதர நிலுவைகளை வாங்குபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும். 22). நகராட்சி வரிகள், பராமரிப்பு / சமூகப கட்டணங்கள், மின் மற்றும் தண்ணீர் கட்டணங்கள் உள்ளிட்டவற்றையும், இந்த அறிவிப்பின் கீழான ஏலம் மற்றும் விற்பனைக்கு விடப்பட்ட சொத்து தொடர்பான பரிமாற்ற கட்டணங்கள் / கட்டணங்கள் உள்ளிட்டவற்றையும் வெற்றி பெற்ற ஏலதாரர் / வாங்குபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும். 23). விற்பனை சான்று வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஏற்படும் நிலுவைகள் (அது ஈட்டுதலான ஜாமின் கட்டணங்கள் அல்லது தற்போதைய ஏலத்தின் கீழ் சொத்தை பாதுகாப்பதற்கான பராமரிப்பு கட்டணங்கள் உட்பட) (விற்பனை சான்றை பதிவு செய்வதற்கு முன்பு, வங்கியால் வழங்கப்பட / திருப்பி தர வேண்டியது) உள்ளிட்ட அனைத்தையும் அதிகபட்ச விலைகோரிய நபரே ஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும் அதிகாரப்பூர்வ அலுவலரின் முழு அதிகாரத்தின் கீழ், ஏதேனும் நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணத்துடனான தாமதம் (வருங்காலத்தில் முன்னுதாரணமாக வைத்துக்கொள்ளப்படாமல்) விலக்களிக்க கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும். 24). வருமான வரிச்சட்டம் 1961 ன் பிரிவு 194-A ன் படி, விற்பனை தொகை ரூ.50,00,000.00/- (ரூபாய். ஐம்பது இலட்சம் மட்டும்) மற்றும் அதற்கு மிகுதியாக இருப்பின், விற்பனை செயல்முறையின் மீதான 0.75% TDS பொருந்தும். வெற்றி பெற்ற ஏலதாரர் / வாங்குபவர், விற்பனை தொகையில் 0.75% TDS யை கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் - பெயரில் பிடித்தம் செய்து அதனை வருமான வரித்துறைக்கு செலுத்தி அதன் சலானையும், படிவம் 26QB / TDS சான்றையும் TDS செலுத்தியதற்கான சான்றாக கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் - க்கு சமர்ப்பிக்க வேண்டும். 25). விற்பனையானது கண்டிப்பாக **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்"** மற்றும் **"இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் இதில் குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் நடத்தப்படும்., எனினும் அதிகாரப்பூர்வ அலுவலர் விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற அல்லது திருத்த உண்டான முழு அதிகாரத்தை தன்வசத்தே கொண்டுள்ளவராவார். ஏலதாரர்கள் உரிய சொத்துக்கான விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, உரிய சொத்து தொடர்பான வில்லங்கங்கள் தொடர்பான சார்பதிவு அலுவலகம் மற்றும் வருவாய் ஆவணங்கள் மற்றும் நகராட்சி ஆவணங்கள் மற்றும் இதர அரசு நிர்வாக ஆவணங்களில் ஆய்வு செய்து, சொத்தின் தன்மை, சொத்து விபரம், நிலை இதர வில்லங்கங்கள், கடன் பொறுப்புகள், சட்டரீதியான நிலுவைகள் போன்றவற்றை பொறுத்து, தங்களில் திருப்தி கொண்டிருக்க வேண்டும். 26). வங்கிக்கான நிலுவைகள், வங்கிக்கு ஏற்பட்ட செலவுகள், கட்டணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து விற்பனைக்கான தேதி நிர்ணயிக்கப்பட்ட போது அல்லது பிறகு என எந்த நேரத்திலும் கடன்தாரர்கள் / ஜாமின்தாரர்கள், அடமானதாரர்/களால் அல்லது அவர்களது சார்பில் வங்கிக்கு வழங்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஏலம் / சொத்து விற்பனை ரத்து செய்யப்படும். அதிகாரப்பூர்வ அலுவலர் அனைத்து அல்லது ஏதேனும் விலைப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ள அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாமல் கருதும் பட்சத்தில் நிராகரிக்க அல்லது ஏலத்தை ஒத்தி வைக்க / ரத்து செய்ய / தள்ளி வைக்க / தொடராமலிருக்க அல்லது எந்த நேரத்திலும் எக்காரணமும் கூறாமல், விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற உண்டான அதிகாரத்தை தன்வசத்தே கொண்டுள்ளவராவார்., மேலும் இது தொடர்பாக அவரது முடிவே இறுதியானது. 27). ஏலதாரர்கள் விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை படித்து, புரிந்து கொண்டதாகவே கருதப்படுவதோடு, அவர்கள் மேற்சொன்ன விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டவராவர். 28). ஏலதாரர்கள் முறையான இண்டர்நெட் தொடர்பு, மின் தேக்கி போன்றவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இண்டர்நெட் தொடர்பிழப்பு, மின் தடைப்பு அல்லது தொழில்நுட்ப காரணங்கள் அல்லது மின்னணு ஏல செயல்முறைகளை பாதிக்கும் காரணங்கள் / எதிர்பாராத நிகழ்வுகளுக்கு வங்கி பொறுப்பல்ல. 29). விற்பனைக்குள்ள சொத்துக்கள் தொடர்பாக எந்த நபரிடமிருந்து வரும் கோரிக்கைகளுக்கும் **கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்** நிறுவனமோ அல்லது அதன் பணியாளர்களோ பொறுப்பல்ல. 30). தற்போதைய இந்த அறிவிப்பு வங்கியின் அலுவல் வலைதளமான www.kotak.com யிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது., விருப்பமுள்ள நபர்கள் அதனை பார்வையிட்டுக்கொள்ளலாம். 31). மேலும் விபரங்களுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர்(கள்) திரு. A செந்தில் குமார் (அலைபேசி எண். 7358709559) திரு. T. பொன்ராஜ் (அலைபேசி எண். 9884283338) மற்றும் திரு. G.K. ரகுராம் (அலைபேசி எண். 9899278269) ஆகியோரை தயவு கூர்ந்து தொடர்பு கொள்ளவும். 32). இவ்விற்பனையானது வங்கியின் உறுதிப்படுத்தலுக்கு கட்டுப்பட்டது.

பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதிகள் 6(2), 8(6), 8(7) & 9(1) ன் கீழான சட்டரீதியிலான 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு

இதன் மேற்குறிப்பிட்டுள்ள நிலுவைகளை மாறாது தேதி வரையிலான வட்டி மற்றும் செலவுகளுடன் சேர்த்து, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் முழுமையாக செலுத்தி, கடன் பொறுப்பை முழுமையாக ஆற்றி வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் "ஜாமின் சொத்து" (இதன் மேற்குறிப்பிட்டது) இதன் மேற்குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி விற்பனை செய்யப்படும் எனவும், ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழி செய்தித்தாள்களில் வெளியாகும் இந்த விற்பனை அறிவிப்பு பிரசுர அறிவிப்பின் ஏதேனும் முரண்பாடு இருப்பின், ஆங்கில செய்தித்தாளில் உள்ள விபரங்களே இறுதியானது.. மேலும் அதுவே குழப்பங்களை போக்கும் இறுதியான விபரங்களாக கருதப்படும் எனவும் இதன் மூலம் கடன்தாரர்கள் / ஜாமின்தாரர்கள் / அடமானதாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

தேதி : 23.07.2022

கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் - க்காக
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்